

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரிய பணிச்சேரி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.7.25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட குடிநீர் (RO PLANT) சுத்திகரிப்பு நிலையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி, துணைத் தலைவர் உமா மகேஸ்வரி மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

40 கி.மீ. வேகத்திற்கு மேல்

## வாகனங்களை ஓட்டினால் அபராதம்!

சென்னை,ஜூன்.20-


சென்னையில் 40 கி.மீ. வேகத்திற்கு மேல் வாகனங்களை ஓட்டினால் அபராதம் விரைவில் விதிக்கப்படும் என்று காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களை தடுக்க மணிக்கு 40 கி.மீ. வேகம் என்ற கட்டுப்பாடு விதிக்கப் படவுள்ளது. வேகமாக செல்லும் வாகனங்களைக் கண்டறிய 20 இடங்களில் கண்காணிப்பு கருவி பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 12 விடியோக்களை உருவாக்கி உள்ளோம். போக்குவரத்து காவர்களின் பணிச்சுமையை குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று சங்கர் ஜிவால் தெரிவித்தார்.

நூற்றாண்டு விழாக் காணும்

# முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் இமயம்போல் உயர்ந்து நிற்கும்!



**த**ன் வாழ்நாளில் எழுதிக் குவித்த இலக்கியக் கருவூலங்களுக்கு பெற்ற பணத்தைக் கொண்டு அறக்கட்டளைகள் நிறுவி, அதன்மூலம் நலிந்தோர் மருத்துவம் மற்றும் கல்வி உதவி பெறவும், முற்போக்கு - பகுத்தறிவு எழுத்தாளர்களுக்கும், தமிழ் செம்மொழி ஆய்வுக்கு சீரியமுறையில் தொண்டாற்றும் அறிஞர்களுக்கும் பொற்கிழி வழங்கி தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்றிய ஒப்புயர்வற்ற தமிழினத் தலைவர் கலைஞர் ஆவார். உண்மை ! வெறும் புகழ்ச்சியில்லை.

1. "கலைஞர் அறக்கட்டளை" வைப்பு நிதி ரூ. 5 கோடி நலிந்தோர் மருத்துவம் மற்றும் கல்வி உதவித்தொகை (வைப்பு நிதியில் பெறும் வட்டியிலிருந்து வழங்கப்படுகிறது.) சுமார் 18 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் பெற்ற உதவித் தொகை.. ரூ. 5 கோடியே 73 இலட்சத்து 90 ஆயிரம் ஆகும்.

2. "கலைஞர் கருணாநிதி பொற்கிழி அறக் கட்டளை" 2007 ஆம் ஆண்டுமுதல் ரூ.1 கோடி வைப்பு நிதி தென்னிந்திய விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் மூலம். இளைஞர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவிடும் பகுத்தறிவு சிந்தனைகளை வளர்க்கும்சி றந்த நூல்களை எழுதி வெளியிடும் பத்து எழுத்தாளர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் பொற்கிழி ஆண்டு தோறும் அரசுநடத்தும் புத்தகத் திருவிழாவில் வழங்கப்பட்டு வருகிறது.

3." கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக் கட்டளை" 2008 ஆம் ஆண்டு வைப்பு நிதி ரூ.1 கோடி (ஒன்றிய அரசின்) செம்மொழி தமிழாய்வு மையம் மூலம்) "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது" ஆண்டுதோறும் ஒருவருக்கு ரூ.10 இலட்சம், தகுதிச் சான்றும் வழங்கப்படுகிறது.

கோவை மாநகரில் 2010 சூன் 23 முதல் 27வரை உலகே கண்டு வியந்து பாராட்டிய வண்ணம் முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற "உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் ஒன்றிய (இந்திய) குடியரசுத் தலைவர் மேதகு பிரதிபா பாட்டில் அவர்கள், பின்லாந்த் நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்போலா அவர்களுக்கு

"கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது" ரூ.10 இலட்சம் பொற்கிழி வழங்கி சிறப்பித்தார்கள். தகுதிச் சான்றிதழுமை இனமானப் பேராசிரியர் அவர்கள் வழங்கி னார்கள். (சிந்து வெளி எழுத்துக்கள் ஹரப்பா எழுத்துக்கள் ஐரோப்பிய மொழியல்ல, ஆரிய மொழியும் அன்று. "தென்னிந்திய திராவிட மொழியே" என்று ஆய்ந்து அறிந்து, உலகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் தெளிவு படுத்திய அறிஞர்தான் பேராசிரியர் அஸ்கோ பர்போலா ஆவார்.)

" தன் உழைப்பால் பெற்ற வருமானத்தில் ரூ.7 கோடிக்கு அறக்கட்டளைகள் நிறுவி, தமிழ் சமுதாயத்திற்கு உதவிக் கரம் நீட்டிய உலகில் ஒரே தலைவர் கலைஞர் ஒருவரே!" நின் புகழ் தமிழ் நிலம் உள்ளளவும் இமயம்போல் உயர்ந்து நிற்கும்.

**க.வை. இராமகிருட்டிணன்**
செயலாளர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம்
மதுரை.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., தலைமை!

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - கே.எஸ்.அழகிரி - கே.சுப்புராயன் எம்.பி. - சே.ம.மதிவதனி சிறப்புரை!

சென்னை, ஜூன் 20-

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதியில் கலைஞர்-100, 6வது நிகழ்ச்சியாக "கடமை சூரியன்! காலத்தின் நாயகன்!" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 21.06.2023, புதன்கிழமை மாலை 6.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர், மண்ணூர் பேட்டை, மேனாம்பேடு ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்துநிலையம் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, 7வது மண்டலக்குழுத் தலைவரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான பி.கே.மூர்த்தி, பகுதிக் கழக செயலாளர்கள் டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., மருத்துவர். ஜி.சாந்தகுமாரி எம்.சி., எல்.பி.எப். மோகன், டாக்டர்.ஏ.பி.மணிகண்டன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி., ஜெ.பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மா.பச்சையப்பன், அ.செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், வி.ரவிந்திரன், பூ.வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு.ரகு, த.கண்ணபிரான், பி.வி. மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி, எம்.குணசேகரன், ப.மதி. ஆ.இரா.அருண், கோ.சேகர் லால், க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத்தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி., தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் கே.எஸ்.அழகிரி, வலது கம்யூனிஸ்ட் மாநில துணைச் செயலாளர் கே.சுப்புராயன், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.ம.மதிவதனி ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

மேலும், இக்கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர் - பா. தாயகம் கவி, அ.வெற்றி அழகன், இ.பரந்தாமன், ப.ரங்கநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் 86வது வட்டக்கழக செயலாளர் எம்.கமல் எம்.சி. நன்றி கூறுகிறார்.

ரூ.43.77 கோடி மதிப்பீட்டில்

# ஆவடி பகுதியில் நலத்திட்டப் பணிகள்!

## ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜூன் 20

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதி ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலைகளை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்த நிலையில் சாலை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 6.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 சாலைப் பணிகள், மாநில நிதி ஆணையத்தின் கீழ் 6.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 சாலைப் பணிகள் மற்றும் மாநில பேரிடர் தணிப்பு நிதியின் கீழ் 30.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.

அதன் ஒரு பகுதியாக ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நான் முதல்வன் என்ற திட்டத்தின் கீழ் 43வது வார்டு ராஜ்பாய் நகர் விநாயகர் கோவில் தெரு தார் சாலை அமைக்கும் பணி, 30வது வார்டு காமராஜர் தார் சாலை அமைக்கும் பணி, 39வது காமராஜர் நகர் பிரதான சாலை தார் சாலை அமைக்கும் பணி, 17வது வார்டு செண்ட் தாமஸ் தெரு தார் சாலை அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டு துவக்கி வைத்தார்..

அதேபோல் மாநில நிதி ஆணையம் நிதியின் கீழ் 41வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய 60 அடி தார் சாலை அமைக்கும் பணி, 27வது வார்டு சோழம்பேடு பிரதான சாலை தார் சாலை அமைக்கும் பணி, 24வது வார்டு அந்தோணியார் நகர் பூங்கா தார் சாலை அமைக்கும் பணி, பாபு நகர் சர்ச் தெரு புதிய தார் சாலை அமைக்கும் பணிகளையும்,

மாநில பேரிடர் தணிப்பு நிதியின் கீழ் 41வது மற்றும் 43வது சரஸ்வதி நகர் சந்திரா சிட்டி முதல் வசந்தம் நகர் பொதுப்பணி துறை கால்வாய் வரை மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி, 28வது வார்டு அராபத் ஏரியிலிருந்து அம்பத்தூர் ஏரி வரை மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணி, 22வது வார்டு கோவிந் தாங்கள் ஏரி முதல் விளிஞ்சியம்பாக்கம் ஏரி வரை மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணி, 15வது வார்டு ஐ.ஏ.எப் பிரதான சாலைக்கு சிறு பாலம் மற்றும் மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளையும் பூஜையிட்டு துவக்கி வைத்தார்..

இந்நிகழ்ச்சியில், மாநகர மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், நாராயண பிரசாத், பொன் விஜயன், ஜி.ராஜேந்திரன்,மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி, வி.அம்மு, பொறியாளர் ரவிசந்திரன், அரசு அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள், கவுன்சிலர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கெ.ஞானசேகரன் வரவேற்புரை! என்.எஸ்.பாரிவள்ளல் முன்னிலை!

# உத்திரமேரூரில் மாபெரும் பொதுக்கூட்டம்: அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

காஞ்சிபுரம் ஜீன் 20 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் - பேரூர் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கம் மாபெரும் பொதுக்கூட்டம் 23.6.2023 - வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு, கே.எம்.ஆர். பேருந்து நிலையம், உத்திர மேரூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பேரூர் கழகச் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு சிறப்பு ரையாற்றுகிறார்.

மேலும் க. செல்வம் எம்.பி., இரா. நாகன், டி.குமார், பொ.சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்தி குமார், மா.ஏழுமலை, இளமதி கோவிந்தராஜ், பத்மா பாபு, கோ.காளிதாஸ், ஏ.கே.ரமேஷ் பாபு, டி.கே.கோபாலகிருஷ்ணன், டாக்டர் வி.திவாகர், கே.தயாளன், தே.வீராசாமி, எம்.பி. தாமஸ், ஏ.மூர்த்தி, ஜி.கண்ணாயிரம், லோ.பவ்யா, து.சுந்தர், மு.தாமோ தரன், தா.சுப்பராயன், எஸ்.ருத்திர கோட்டி, த.சுகுணா சுந்தராஜன், ஏ.எம்.கெங்கன், தே. பாபு, டி.எஸ்.குமாரதேவ், இரா.கார்த்திகேயன், கா.மாய கிருஷ்ணன், து.ரமேஷ், ஏ.வீரமணி, ஆ.ஜெய காந்தா, ப. மகேந்திரன், க.அப்துல்ஹக்கீம், வெ.கோவிந்தராஜ், வெ.குணசேகரன், மா.கருணாநிதி, ந. ராஜேந்திரன், ஏ.செல்லமுத்து, வி . ர ா ஜ ப ா ண் டி , ஆ.நீலகண்டன், ஜி.மனோகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்று கின்றனர்.

வெ.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# 13 வது வட்ட கழகம் சார்பில் 500 பேருக்கு உணவு!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ வழங்கினார் !

சென்னை ஜூன்:20

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வட்ட கழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடியேற்றி,ஏழை எளியோர் 500 பேருக்கு பிரியாணி மற்றும் இனிப்பு ஐஸ்கிரீம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழகத் தோழர்களுக்கு கருப்பு சிவப்பு துண்டு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மு.செல்வம், ந.தட்சிணாமூர்த்தி, கே.எஸ். ஆனந்தன், ஜெ.கருணாநிதி, செ.முரளிதரன, கே.பிரபாவதி, த.கதிரவன், எஸ்.முத்துராஜ், ஜெ.சுந்தரம், பி.ராமராஜ், எஸ். யோகானந்தம், வி.சி.சூர்யா, ம . ர ஞ் சி த் கு ம ா ர் , டி.இ.பரணிகுமார், பொதுக் குழு உறுப்பினர் ஆர்.முருகேசன்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஏகா.கார்த்திகேயன், இரா.சந்தர், சுற்றுச்சூழல் அணி மாவட்டத் துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு துணை அமைப்பாளர் ஏ.ஜி.தேவராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அ மை ப் ப ா ள ர் எஸ்.ஏ.மணி,மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ் ஆர்.பிரகாஷ், தமிழ்சிவா, எஸ்.மைக்கேல், ஜெ . ஆ ர் . டி . சே க ர் , சிவக்குமார்,பில்டர் செந்தில், எஸ்.விஜயராகவன், புதியவன்,பந்தய சேகர் கமல்,ராம், ந.உத்தமன், ஒய்.ஆர்.வி.ரவி, எச்.ஜி.சீணி, ரயில் சீணி, கே . ஜ ம் பு லி ங் க ம் , ம.இ.சார்லஸ், ரா.கபிலன், ம.நீலகண்டன், த.ந.சச்சு, த.ந.சரவணன், த.ந.சம்பத் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஆவடி சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை பயன்பாட்டிற்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து பள்ளி கட்டிடத்தை நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி முன்னிலையில் பார்வையிட்டார். உடன் நகர செயலாளர் தி.வை.இரவி, நகர் மன்ற ஆணையர் புகேந்திரி, மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், ம.இராஜி, எஸ்.ஜெயபாலன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.நாராயணபிரசாத், துணைத் தலைவர் சரளா நாகராஜ் தலைமை ஆசிரியர் வி. ரமேஷ், நிர்வாகிகள் ஜெ.அன்பழகன், நாகராஜ் , எஸ்.கமலக்கண்ணன், பேபி, ரவி, பாபு , குணசேகரன், நகர் மன்ற உறுப்பினர்கள் உஷாராணிவெங்கடேசன் , விஸ்வநாதன், தி.வை.சுரேஷ்குமார், எம்.ஜெயக்குமார், எம். கிருஷ்ணன், வார்டு செயலாளர்கள் ஜெ.ரவிச்சந்திரன், ஜீவானந்தன், மோகனகிருஷ்ணன், வெங்கடேசன், செந்தில், தி.தொ.பாபு, எஸ்.டி.எஸ்.பாஸ்கரன், மு.பா.மகேஷ்குமார், ஏகாம்பரம், கோபால், அசோக்குமார், எம். குணசேகரன், பா.கந்தன், கேட்ரிங் சுரேஷ், பி.எல்.ஆர்.யோகா, பரமசிவன், டி.கே.பாபு, நடுகுத்தகை கே. சுரேஷ்குமார், எம்.மோகன், ஜி.சி.சி.கருணாநிதி, ஆர்.செந்தாமரை, உள்பட பலர் கலந்து கொண்டனர் .

பூண்டி கலைவாணன் தலைமையில்

# திருவாரூர் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## கொட்டும் மழையிலும் நள்ளிரவில் திரண்ட மக்கள் வெள்ளம்!

திருவாரூர்,ஜூன்20.

திருவாரூர் மாவட்டத்திற்கு வந்திருந்த தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நள்ளிரவில் திருவாரூர் கீழவீதியில் திரண்டுநின்று பூண்டி கே. கலைவாணன் தலைமையில் பிரமாண்ட வரவேற்பளித்தனர்.மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றனர் .

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் கோட்டம்" திறப்புவிழாவிற்கும் அரசின் நலத்திட்டங்களின் ஆய்வுகளுக்காகவும் திருவாரூர் வந்துள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.06.2023)நள்ளிரவு திருவாரூர் வந்தடைந்தார். அப்போது மண்ணின் மைந்தரை வரவேற்க திருவாரூர் கீழவீதியில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில் ஏராளமானோர் திரண்டு நின்று வாழ்த்து முழக்கமிட்டு வரவேற்றனர். அனைவரின் வரேவேற்பையும் தனது பயணக்களைப்பையும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்களின் அன்பு மழையில் நனைந்து முதலவர் முக.ஸ்டாலின் வரவேற்பினை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார்.

நேற்று (19.06.2023)காலை கீழவீதியில்உள்ள தனது இல்லத்தில் இருந்து புறப்பட்ட முதல்வர் முக.ஸ்டாலின் வாயிலில் திரண்டிருந்த மக்களை சந்தித்து பேசியதோடு , மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.பின்னர் கலைஞர் அவர்களின் தாயார் நினைவிடத்தின் வழியே பயணித்து காட்டூர் கலைஞர் கோட்டத்தின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அடுத்து அங்கு நடைபெற இருக்கும் பொதுக்கூட்ட அரங்கை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முதல்வரின் இந்த பயணத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, டி.ஆர். பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி. கலைவாணன், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் - தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியப் பெருந் தலைவர் புலிவலம் ஏ.தேவா, நாகை அ.அசோகன், நாகை இல.மேகநாதன், எஸ்.கே. வேதரத்தினம், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், மற்றும் மாவட்ட ஒன்றிய நகரபேரூர் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட

# கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்–அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம் நாளை (21.06.2023 புதன்கிழமை) மாலை 6.00 மணிஅளவில், எண் 61எப் வேளச்சேரி முதன்மை சாலை என்கிற முகவரியில் அமைந்துள்ள கழக அலுவலகமான பொ. தனசேகரன் மாளிகையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



இராயபுரம் கிழக்கு பகுதி 49 ஆவது வட்ட கழகத்தின் சார்பில் பாலு முதலி தெருவில் வட்டச் செயலாளர் எல்.சீனிவாசன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா இளைய அருணா சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உடன் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் வே.சிவகுமார், கழகப் பேச்சாளர் அத்திப்பட்டு சாம் ராஜ், வடசென்னை ந.மனோகரன், ஆர்.எம்.டி. ரவீந்திரன், மு.கோபி, நா.சண்முகம், கலைச்செல்வன், எம்.வி.என்.மணி, குமார், கோதண்டன், பா.சுதாகர், தாக பன்னீர்செல்வம், இ.கதிரவன், ஆர்.பாரதிதாசன், ஜி.விநாயகம், ஏ.வேணுகோபால் ஆகியோர் உடன் உள்ளனர். கே.ஆர்.கோபிநாத் நன்றி கூறினார்.